TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8109747

1. District : மாவட்டம் Tirunelveli | PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption | Year: ஆண்டு 2022 | FIR No.: மு.த.அ. எண் 06/2022 | Date: நாள் 24.06.2022

2. (i) Act சட்டம்: PC Act 1988 (as amended in) Act 16 of 2018 | Sections பிரிவுகள்: 7 (a)
   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 22.06.2022 | Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 08.45 hrs | Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24.06.2022 | Time : நேரம் 07.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் Taluk Office, Thisaiyanvilai. 60 Km South East
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் V.Mahalakshmi | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr.Velmurugan
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 23.01.1990 | (d) Nationality : நாட்டினம் INDIAN | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் House wife | (g) Address : முகவரி 13/6 Krishnan Kovil Middle street, Palayamkottai.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tr.Anbalagan, Firka Surveyor, Thisaiyanvilai, Tirunelveli District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   No delay.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 24.06.2022-ம் தேதி காலை 07.00 மணிக்கு திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் D.ராபின் ஞானசிங் ஆகிய நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது திருமதி.V.மகாலெட்சுமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட திசையன்விளை குறுவட்ட சர்வேயர் திரு.அன்பழகன் என்பவர் பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும் புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு தென் சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசியின் வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 24.06.2022-ம் தேதி 07.30 மணிக்கு திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.06/2022 u/s 7(a) of PC Act 1988 (as amended in) Act 16 of 2018 என வழக்கு பதிவு செய்தேன். மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் V.மகாலெட்சுமி, க/பெ வேல்முருகன், 13/6, கிருஷ்ணன் கோவில் நடுத்தெரு, பாளையங்கோட்டை. பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, திருநெல்வேலி. ஐயா, நான் மேலே கண்ட முகவரியில் தந்தையுடன் வசித்து வருகிறேன். நான் BE படித்துள்ளேன். எனக்கு திருமணமாகி இரண்டு பிள்ளைகள் உள்ளனர். எனது கணவர் சவுதி அரேபியாவில் வேலை பார்த்து வருகிறார். எனது கணவருக்கு சொந்த ஊர்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Mahalakshmi
24/06/2022

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
24/06/22 at 0.800 hrs

Name: பெயர் D Robin Gnana Singh
Rank: நிலை ........................No. எண் ..........
Inspector of Police
V&AC, Tirunelveli

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

திசையன்விளை ஆகும். கடந்த 09.09.2021ம் தேதி திசையன்விளை கிராம அயன் புஞ்சை சர்வே எண் 637ல் அமைந்துள்ள 4 செண்ட் கொண்ட பிளாட் எண் 102ஐ கூட்டப்புளியை சேர்ந்த திரு.சேவியர் என்பவரிடமிருந்து திசையன்விளை சார்பதிவக கிரைய ஆவண எண் 2623/2021ன்படி வாங்கியிருந்தேன். கிரைய ஆவணம் பதியும்போது பட்டா மாறுதலுக்கான விண்ணப்பமானது அனுப்பப்பட்டுள்ளதாக எனது செல்போனுக்கு குறுஞ்செய்தி வந்திருந்தது. நான் எனது கணவருடன் கடந்த அக்டோபர் மாதத்தில் சவுதி அரேபியாவுக்கு சென்றுவிட்டு, 10.06.2022ம் தேதியில்தான் பாளையங்கோட்டைக்கு வந்தேன். அதனால் நான் பட்டா மாறுதல் பற்றி ஏதும் பார்க்கவில்லை. கடந்த 15.06.2022-ம் தேதி காலை 08.45 மணிக்கு 8838038657 என்ற செல்போனில் இருந்து என் செல்போனுக்கு அழைத்த திசையன்விளை சர்வேயர் திரு.அன்பழகன் என்பவர் நான் கிரையம் பெற்ற இடத்திற்குரிய ஆவணங்களை கொண்டு வரும்படியும், பட்டா பெயர் மாற்றம் செய்து கொடுக்க ஏற்பாடு செய்து கொடுக்கிறேன் என்று சொன்னார். நான் திசையன்விளையில் இருக்கும் எனது மாமனர் திரு.ஆறுமுக நயினார் அவர்களிடம் ஆவணங்களை எடுத்துக்கொண்டு சர்வேயர் திரு.அன்பழகனை பார்க்கும்படி சொன்னேன். அன்றே எனது மாமனாரும் ஆவணங்களை எடுத்துக்கொண்டு சர்வேயரை பார்த்துள்ளார். ஆவணங்களை வாங்கிப்பார்த்த சர்வேயர் ஆவணங்களை மாற்றி எடுத்து வந்துள்ளதாகவும், என்னை செல்போனில் தொடர்பு கொண்டு பேசுமாறு சொன்னதாகவும் எனது மாமனார் சொன்னார். அன்று மதியம் சுமார் 12.00 மணியளவில் சர்வேயர் திருஅன்பகழனை அவரது செல்போனில் தொடர்பு கொண்டு பேசியபோது வேறு பத்திரத்தை மாற்றி கொண்டு வந்ததாகவும், மூலபத்திரம் கொடுத்து விடுமாறும், தான் இடத்தை பார்வையிட்டுவிட்டதாகவும் சொன்னார். பின்பு எனது மாமனாரிடம் மேற்படி திசையன்விளை சார்பதிவக கிரைய ஆவண எண் 2623/2021ஐ கொடுக்க சொன்னேன். பின்னர் எனது மாமனாரும் அந்த ஆவணங்களை சர்வேயரிடம் கொடுத்தார். பின்பு 22.06.2022ம் தேதி காலை 08.45 மணிக்கு சர்வேயர் எனது செல்போனில் தொடர்பு கொண்டு பேப்பர் கொண்டு வந்து கொடுத்தார் என்றும், பட்டா பெயர் மாற்றம் செய்ய ஏற்பாடு செய்து கொடுப்பதற்கு தனக்கு ரூ.6,000/- கொடுக்க வேண்டும் என்றும், பணம் கொடுத்தால் பட்டா இரண்டு நாளில் வாங்கி கொடுத்துவிடுவேன், அதனால் பெண்டிங் கிடக்கிறது என்றும் சொன்னார். பின்பு நான் நேற்று 23.06.2022ம் தேதி மதியம் சுமார் 11.45 மணியளவில் சர்வேயர் செல்போனில் தொடர்பு கொண்டு பட்டா மாறுதல் சம்மந்தமாக ரூ.6,000/- கேட்டதாக எனது கணவரிடம் சொன்னபோது அவர் ஆன்லைனில் ஸ்டேட்டஸ் பார்த்துவிட்டு ரிஜக்ட் ஆகியிருக்கு, எப்படி பண்ணுவாங்க, பணம் வாங்கிவிட்டு ஏமாத்திவிடுவாங்க, நீதான் அப்ளை பண்ணவில்லையே என்று சொன்னதாக சொன்னபோது நான் செக் பண்ணிவிட்டு சொல்லுகிறேன் என்று சொல்லிவிட்டு சர்வேயர் போன் தொடர்பை துண்டித்துவிட்டார். பிறகு நேற்று பிற்பகல் 02.45 மணியளவில் சர்வேயர் எனது செல்போனில்

அழைக்கும்போது நான் வேலையாக இருந்ததால் எடுக்கவில்லை. பின்பு நான் சுமார் 03.00 மணியளவில் சர்வேயர் செல்போனில் தொடர்பு கொண்டபோது அவர் பட்டா தாசில்தாரிடம் இருக்கிறது நீங்கள் ரூ.6,000/- நாளைக்கு கொண்டு வாருங்கள் உடனே பட்டா வாங்கிக்கொள்ளலாம் என்று சொன்னார். நான் எனது கணவர் சொன்ன விபரத்தை மீண்டும் சொன்னபோது அவர் ஆன்லைனில் அப்படித்தான் வரும், நான் சர்வேயர் சொல்றேன் பட்டா வாங்கிதருகிறேன் என்று சொல்லுகிறேன் நீங்கள் ஆபிசுக்கு பணத்துடன் வந்து என்னை பாருங்கள் என்று சொன்னார். நானும் வேறு வழியின்றி அப்போதைக்கு சரி என்று சொல்லிவிட்டேன். பின்பு நான் யோசித்து பார்த்தபொழுது பட்டா மாறுதலுக்கு ஏற்பாடு செய்ய லஞ்சமாக ரூபாய் 6,000/- கேட்கிறார் என்று எனது மனம் கஷ்டப்பட்டது. அவருக்கு லஞ்சமாக பணம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே இன்று 24.06.2022ம் தேதி இது சம்மந்தமாக ஒரு புகார் மனு கொடுக்கிறேன். என்னிடம் எனது பெயரில் பட்டா பெயர் மாற்றத்திற்கு ஏற்பாடு செய்ய லஞ்சம் கேட்ட சர்வேயர் திரு.அன்பழகன் மீது நடவடிக்கை எடுக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு sd.(V.Mahalakshmi), 24.06.02022.

Sir, Received the complaint today on 24.06.2022 at 07.00 hrs and conducted confidential enquiry and found prima facie, hence informed the matter to the Superintendent of Police, Southern Range, DVAC, Chennai, obtained permission and I registered a case in Tirunelveli V&AC Cr.No.06/2022 u/s 7(a) of Prevention of Corruption Act, 1988 (as amended in) Act 16 of 2018 on 24.06.2022 at 07.30 hrs. sd.D.Robin Gnanasingh, 24/6/22. Inspr. of Police, V&AC, TIN.

இந்த வழக்கின் அசல் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் திருநெல்வேலி அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். ஒரு நகலை விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன்.

24/6/22

D Robin Gnanasingh
Inspector of Police
V&AC, Tirunelveli